## பாடல் 4: இறையே என் திருவே (திருவிருந்து)

இயல்: கிறிஸ்து ராஜன்
இசை: நிஷா
பாடியவர்: டெய்சி என்சோன்
இசை இயக்கம்: Fr..டெனிஸ் வாய்ஸ்

பல்லவி

இறையே என் திருவே எனை மீட்கவே

இல்லம் என் உள்ளம் எழும் நேரமே

அறியாத பதரான என்னைத் தேடியே

அரசாளும் நிலைதாழ்த்தி வந்த தேவனே

என் ஆயனே உணவாக நான் காண்கிறேன்

என் ஆயுள் முழுதாக உடன்வாருமே

சரணம் 1

கள்ளம் அது இல்லை உன் மனம் தூயதே

துள்ளும் இசை தன்னில் மகிழ்ந்தாடுதே

புவி மீது மனுவான என்தேவனே

புது மாற்றம் எனில் தோன்றும் நன்நாளிதே

விரும்பாத என் தீமைதனை மாற்றினேன் - திரு

விருந்தாக என் நாவில் உனை ஏந்தினேன்

சரணம் 2

அன்னை மடி துஞ்சும் நீ உயிரோவியம்

அன்பைத் தர வந்த பெருங்காவியம்

புலர்காலை பனி போல என் துன்பமே

உலர்ந்தோடும் எனைத்தீண்டும் அந்நேரமே

அறம்போற்றி என்தேவன் உனைசேருவேன் - தினம்

அறியாதார் உனைத்தேட பறைசாற்றுவேன்

This song is prepared for Iniya Ithayangal whatsapp group and linked in www.manavai.com